Registered Number :
TN/MA/14/2018-2020
RNI No : TNTAM/2000/912
Date of publishing :
5th September 2018
Date of posting :
10, 11th September 2018
Posted at BPC, Madurai

கண் ஒளி

அரவிந்த் வெளியீடு

கண் நல விழிப்புணர்வு மாத இதழ்

ஆசிரியர்
டாக்டர்.ஜி.நாச்சியார்

ஆசிரியர் குழு
சித்ரா துளசிராஜ்
கோ. முருகராஜ்
திவ்யா ரமேஷ்

சந்தா பொறுப்பாளர்
ஜெ. பரிமளா

தொடர்புக்கு :
'கண்ஒளி'
அரவிந்த் கண்
மருத்துவமனை,
1, அண்ணாநகர்,
மதுரை – 625020

மின்னஞ்சல் :
kannoli@aravind.org

# கண் ஒளி

விழி 35 | பார்வை 2 | செப்டம்பர் 2018

## உடல்நலன் பற்றி போதிய கவனம் நம்மிடம் உள்ளதா?




பார்வை இழப்பு என்பது உடலில் ஏற்படும் குறை மட்டும் அல்ல. தங்களது வாழ்வாதாரமே பாதிக்கப்பட்டுள்ளதாக சிலர் கருதுவார்கள். அது உண்மையும் கூட. சுயதேவைகளைக் கூட செய்துக்கொள்ள முடியாத நிலையில் மிகவும் கஷ்டப்படுவதாக பார்வையற்ற நிலையில் இந்தியாவின் கிராமப்புறங்களில் வசிக்கும் பலர் வேதனையுடன் பகிர்கின்றனர். கிட்டத்தட்ட 12 மில்லியனுக்கும் அதிகமானோர் முழு பார்வை இழப்பால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 80 சதவீதத்தினர் கண்புரை நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். எளிய அறுவை சிகிச்சை மூலம் இவர்களுக்கு பார்வை திரும்பக் கிடைக்கும். ஆனால் அதைப் பற்றிய போதிய விழிப்புணர்வு இல்லாமல் உள்ளனர். நாம் நமது உறவினர்கள், நண்பர்கள் மற்றும் நமக்கு அறிமுகமானவர்களின் பெயர்களைப் பட்டியலிட்டு பார்த்தால் அவர்களில் பலர் உடல்நலனின் மீது போதிய அக்கறை செலுத்தாமல் அலட்சியமாகவே இருப்பது தெரியும். மிகச்சாதாரண நிலையில் குறைபாடு இருந்தால் அதை ஆரம்ப நிலையிலேயே கவனிக்காமல் நோய் முற்றிய நிலையில் மருத்துவரிடம் செல்வதும் வெகுவாகவே உள்ளது. உடல்நலனிலேயே இவ்வளவு அக்கறை இல்லாமல் இருக்கும் நம்மில் பலர், 'கண் தானே' என்று கண் குறைபாடுகளுக்கு தாங்களாகவே மருந்துக்கடைகளுக்குச் சென்று சொட்டு மருந்து, பிதுக்கு மருந்து (ointment) கேட்பதும் பரவலாக உள்ளது. இந்த நடைமுறை கிராமப்புறங்களில் மட்டும் அல்ல. நகரங்களிலும் ஏன் படித்தவர்கள் மத்தியிலுமே உள்ளது. நமது சிறு அலட்சியம் மிகப்பெரிய ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தும். உலகெங்கும் பார்வை இழந்தவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பது கணக்கிடப்பட்டுள்ள நிலையில் நமது அலட்சியத்தால் நாமும் நம் அன்பிற்குரியவர்களும் அந்தப் பட்டியலில் சேர வேண்டாமே!

*– ஆசிரியர் குழு*

அமெரிக்க, ஐரோப்பிய மற்றும் உலக சுகாதார நிறுவனத்தின் (WHO) தரநிலைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன

# உலக தரத்திற்கு இணையான தயாரிப்புகள் வாங்கக்கூடிய விலையில்

மடங்ககூடிய மற்றும் மடங்காத உள்விழி லென்ஸ்கள்



கண்சொட்டு மருந்துகள்






## 74% பணியாளர்கள் பெண்கள்

- கண்மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருந்துகள் தயாரிப்பில் 20 வருடத்திற்கும் மேலாக அனுபவமிக்க நிறுவனம்.
- 2014-ம் ஆண்டிற்கான CNN-IBN சேனலின் "நாளைய நல்வாழ்விற்கான கண்டுபிடிப்புகள்" விருது பெற்ற நிறுவனம்.

TÜVRheinland®
EN ISO 9001 : 2008
EN ISO 13485 : 2012 / AC : 2012




CE 0197
மருத்துவ கருவிகளை ஐரோப்பிய நாடுகளில் விற்பதற்கான CE முத்திரை



aurolab
மேலும் தொடர்புக்கு
போன்:0452-3096 100
இ-மெயில்: info@aurolab.com
web:www.aurolab.com

# மாட்டின் வால் கண்ணில் பட்டதால் ஏற்பட்ட பார்வையிழப்பு



திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் அருகே உள்ள நவக்கன்னி எனும் கிராமத்தைச் சேர்ந்த மயிலாத்தாள் (39) என்பவர், தனது வீட்டில் நான்கு மாடுகளை வளர்த்து வருகிறார். சிறுவயது முதலே மாட்டை அன்போடு வளர்த்து வருகிறார். மாட்டுக்கு புல் போடுவது, காட்டில் மேயவிடுவது, தண்ணீர் வைப்பது என அனைத்து வேலைகளையும் செய்து வந்தார். பொதுவாக மாட்டின் மேல் ஈ, கொசு போன்றவை உட்காரும். அவற்றை மாடு தன் வாலால் அடித்து விரட்டும்.

ஒருநாள், மயிலாத்தாள் மாட்டின் பாலைக் கறந்துகொண்டிருந்தார். அப்போது ஈயை விரட்ட தனது வாலை மாடு சுழற்றியபோது மயிலாத்தாளின் இடது கண்ணில் பட்டுவிட்டது. வால் தானே பட்டது என பெரிதாக அவர் பொருட்படுத்தவில்லை. தன் ஊருக்கு அருகில் உள்ள மருந்துக்கடையில் தன் பிரச்சனையைச் சொல்லி ஏதோ ஒரு மருந்தை வாங்கிப் போட்டுள்ளார். அடுத்தநாளில் இருந்து அதிக வலியால் துடித்தவர் திண்டுக்கல் அரவிந்த் கண் மருத்துவமனைக்குச் சென்றுள்ளார். அங்கு பரிசோதனை செய்த மருத்துவர், மதுரை அரவிந்த் கண் மருத்துவமனைக்குச் செல்லும்படி பரிந்துரைத்துள்ளார். மதுரை அரவிந்திற்கு அவர் வந்தபோது அவருக்கு விரிவான கண் பரிசோதனைகளைச் செய்தோம். அவரது கண்ணின் கருவிழியில் புண் உள்ளதும் சீழ்பிடித்து இருப்பதும் பரிசோதனையில் தெரிய வந்தது. அந்தக் கண்ணில் பார்வை வர மிகக் குறைவான வாய்ப்பே உள்ளது எனவும் புண் ஆறுவதற்கு சிகிச்சை அளிக்கப்படும் எனவும் மருத்துவர் தெரிவித்தார். அவருக்கு முறையான சிகிச்சை அளிக்கப்பட்டது. பாதிக்கப்பட்டிருந்த கண், சிகிச்சைக்குப்பின் சுருங்கியதால், அவருக்கு செயற்கை கண் வைக்கப்பட்டது. சிகிச்சை பெறாமல் அவர் இருந்திருந்தால், ஒரு கண்ணில் ஏற்பட்ட புண் மற்றொரு கண்ணையும் பாதிக்கும் நிலை ஏற்பட்டிருக்கும். மாட்டின் வால், கொம்பு போன்றவற்றால் அடிபட்டு, இதுவரை மூன்று பேருக்கு பார்வையிழப்பு ஏற்பட்டு செயற்கைக்கண் பொருத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

எந்த நேரமும் கவனமாக இருக்க வேண்டும்; பால் கறக்கும்போது மாட்டின் வால் கண்ணில் பட வாய்ப்புள்ளதால் பால் கறக்கும் நிலையை (position) கொஞ்சம் மாற்றிக் கொள்ள வேண்டும்; கால்நடை மூலம் ஏதேனும் கண்ணில் அடிபட்டால் உடனடியாக கண் மருத்துவரைப் பார்க்க வேண்டும்; எந்த மருந்துக் கடையிலும் கண் பரிசோதனை உபகரணங்களோ கண் மருத்துவரோ இருப்பதில்லை என்பதையே மயிலாத்தாளுக்கும் மாடு வளர்க்கும் மற்றவர்களுக்கும் எங்கள் மருத்துவமனை சார்பில் தீவிரமாக வலியுறுத்துகிறோம்.


**M.** ***மீனா, செயற்கைக்கண் பிரிவு, அரவிந்த்-மதுரை***



*ஒவ்வொரு மாதமும் 10, 11 தேதிகளில் கண் ஒளி இதழ்களை 15000க்கும் மேற்பட்ட சந்தாதாரர்களின் முகவரிகளுக்கு முறையாகச் சரிபார்த்த பின்னரே தபாலில் அனுப்பி வைக்கிறோம். இருப்பினும் வெகு சில சந்தாதாரர்கள் தங்களுக்கு 'கண் ஒளி' இதழ்கள் சரிவர கிடைப்பதில்லை என்றும், ஒரு மாதம் வரும் இதழ் மறு மாதம் வருவதில்லை என்றும் புகார் அளிக்கின்றனர். இதழ் கிடைக்கவில்லை எனில் உங்கள் ஊரில் உள்ள தபால் நிலையத்தில் புகாரளிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். மேலும் உங்கள் பகுதி அஞ்சல்துறை பணியாளரிடம் இதழைத் தவறாமல் விநியோகிக்கும்படி கோரவும்.*

***– கண் ஒளி' ஆசிரியர் குழு.***





## தரமான கண் கண்ணாடிகள் வாங்க எங்களை அணுகுங்கள்

**ARAVIND OPTICALS**

**அரவிந்த் ஆப்டிகல்ஸ்**

அரவிந்த் கண்மருத்துவமனை
1, அண்ணாநகர், மதுரை - 625 020
தொலைபேசி - 0452-4356164

- புரொக்ரஸிவ் லென்ஸ்கள்
- பிளாஸ்டிக் லென்ஸ்கள்– லேசான, உடையாத லென்ஸ்கள்
- பிரதிபலிப்பு இல்லாத கண்ணாடிகள்
- கீறல் விழாத கண்ணாடிகள் மற்றும் ஏராளமான அழகிய பிரேம்கள்

# தலைவலியால் பாதிக்கப்பட்ட மாணவி



பத்தாம் வகுப்பு படிக்கும் தமிழரசி எனும் மாணவி தனது தந்தையுடன் கண் பரிசோதனைக்காக உடுமலைப்பேட்டை அரவிந்த் கண் மருத்துவமனைக்கு வந்திருந்தார். தனக்கு அடிக்கடி தலைவலி வருவதாகக் கூறினார்.

தமிழரசியை முறையாகப் பரிசோதித்துப் பார்த்ததில் பார்வைத் திறன் சீராக (6/6) இருப்பதைக் கண்டறிந்தோம். ஆனால் கண்களைச் சுற்றியுள்ள தசைகள் பலவீனமாக இருப்பதை அறிந்தோம். விஷன் தெரபி எனப்படும் பயிற்சியை வீட்டில் இருந்தே தினமும் செய்யும்படி மருத்துவர் பரிந்துரைத்தார். அதை எவ்வாறு செய்ய வேண்டும் என தெளிவாகக் கேட்டு அறிந்துக் கொண்டார் தமிழரசி. பேனாவைக் கொண்டு செய்யப்படும் எளிய பயிற்சிதான் அது. ஒரு வாரம் தொடர்ந்து செய்யும்படி அறிவுறுத்தினோம். இரு வாரங்களுக்கு பிறகு இருவரும் மறுபரிசோதனைக்கு வந்திருந்தனர். கூடவே தனது பள்ளித் தோழி ஒருவரையும் அழைத்து வந்திருந்தார் தமிழரசி. தமிழரசியின் கண்களைப் பரிசோதித்துப் பார்த்ததில் தசைகள் நல்ல நிலையில் இருந்தன. தொடர் பயிற்சியில் முன்னேற்றம் ஏற்பட்டிருந்தது. தனக்கு தலைவலி வருவதில்லை என்றும் கூறினார்.

தனது தோழிக்கும் தலைவலி அடிக்கடி வருவதாகவும் அவரையும் பரிசோதனைக்காக அழைத்து வந்ததாகக் கூறினார் தமிழரசி. தான் மேற்கொள்ளும் சிகிச்சை முறைகளையும் பயிற்சிகளையும் பிறருக்கு தாங்களாகவே பரிந்துரைக்காமல் மருத்துவமனைக்கு அழைத்து வந்த தமிழரசியின் அறிவுத் திறனை வெகுவாக மருத்துவர் பாராட்டினார். ஏனெனில் அனைவருக்கும் ஒரேமாதிரி குறைபாடு இருப்பதில்லை. தனித்தனியே பரிசோதனை செய்து பார்த்தால்தான் என்ன குறைபாடு என்பதைத் தெளிவாகக் கண்டறியமுடியும்.

- **S. *காளியம்மாள்***
***விழி ஒளி ஆய்வாளர், அரவிந்த்-உடுமலைபேட்டை***

## சந்தா செலுத்த...

2 வருடச் சந்தா: ரூ.50/–

4 வருடச் சந்தா: ரூ.100/–

கண் ஒளி இதழுக்கு சந்தா செலுத்த விரும்புபவர்கள், சந்தாத் தொகையை மணியார்டரில் அனுப்பி வைக்கவும். உங்களது தெளிவான முகவரி, தொலைபேசி எண் மற்றும் அஞ்சல் இலக்க எண்ணையும் குறிப்பிட்டு, 'கண் ஒளி சந்தாவுக்கு' என எழுதவும்.

**முகவரி:**

காசாளர், கண் ஒளி,
அரவிந்த் கண் மருத்துவமனை,
1, அண்ணா நகர், மதுரை – 625020.

இதழின் மேலே இடம்பெற்றுள்ள உங்கள் முகவரி உள்ள ஸ்டிக்கரை பார்த்து உங்கள் சந்தா முடிவடையும் மாதத்தைத் தெரிந்து கொள்ளலாம். இந்த மாதத்துடன் சந்தா முடிவடையும் நிலையில் உள்ளவர்கள் சந்தாத் தொகையை அனுப்பி வைக்கவும்.

உங்கள் அன்புக்குரியவர்களுக்கு பிறந்தநாள், திருமணநாள் பரிசாக 'கண் ஒளி' இதழை அளிக்கவும். இதழுக்கான சந்தாவை எங்களிடம் செலுத்தவும். உங்கள் சார்பாக ஒவ்வொரு மாதமும் கண் ஒளி இதழை உங்கள் அன்புக்குரியவர்களுக்கு நாங்கள் அனுப்பி வைக்கிறோம்.

**தொடர்புக்கு:**

தொலைபேசி: 0452–4356500 Extn.: 516, 530
kannoli@aravind.org

கண்ஒளி பற்றிய உங்கள் கருத்துகளை தபால் மூலமாகவும் தெரிவிக்கலாம்.
ஆன்லைனிலும் தெரிவிக்கலாம்.
https://goo.gl/gDMsmn
இந்த QR code ஐ உங்கள் ஸ்மார்ட் ஃபோனில் ஸ்கேன் செய்தும் அனுப்பலாம்

# குறைமாதக் குழந்தையும் கண் பாதிப்பும்




நித்யா என்பவருக்கு பிறந்த அம்பை எனும் பெண் குழந்தை 1.8 கிலோதான் இருந்தது. கருவுற்று 32 வாரங்களிலே குழந்தையைப் பெற்றெடுத்தார் நித்யா. மூச்சுத்திணறல் காரணமாக, குழந்தை 20 நாட்கள் பிராண வாயு ($O_2$) பெற்று இருந்தது. குழந்தை பிறந்த மருத்துவமனையில் இருந்த கண் மருத்துவர், குழந்தையைப் பரிசோதித்து பார்த்ததில் விழித்திரையில் உள்ள இரத்த நாளங்களின் வளர்ச்சி குறைவாக உள்ளது என்றும் அது முழுமையடையும் வரையில் பரிசோதனை மேற்கொள்ள வேண்டும் என்றும் அறிவுரை கூறினார். பத்து நாட்கள் கழித்து மீண்டும் மறுபரிசோதனைக்கு வரும்படி கூறியுள்ளார்.

ஆனால் குழந்தை வளர, வளர கண் நரம்பும் வளரும் என நினைத்து குழந்தையை பெற்றோர்கள் அழைத்து வரவே இல்லை. குழந்தை வளர்ந்து ஆறு மாதங்கள் ஆகிய பின்பும் பெற்றோர்களின் முகத்தைப் பார்க்கவில்லை என்பதால், அரவிந்த் கண் மருத்துவமனைக்கு அழைத்து வந்தனர். குழந்தையைப் பரிசோதித்துப் பார்த்ததில் இரண்டு கண்களிலும் விழித்திரைப் பார்வைத்தளம் வரைக்கும் நரம்பு பிரிந்துள்ளது என்றும் இக்குறைபாடானது இறுதி நிலையில் (STAGE 5 ROP) உள்ளது என்றும் அறுவை சிகிச்சை மட்டும் செய்ய முடியும் என்றும் மருத்துவர் கூறினார். இதைக்கேட்ட குழந்தையின் பெற்றோர்களும் உறவினர்களும் திகைத்துபோய் செய்வதறியாது நின்றனர். அறுவை சிகிச்சையால் பாதிப்பு ஏதும் நேராது என்று மருத்துவர் விளக்கமாகக் கூறியதால் அறுவை சிகிச்சைக்கு ஒப்புதல் அளித்தனர். அறுவை சிகிச்சைக்குப் பின் குழந்தை முகம் பார்த்து சிரிக்கிறது.

**K.M. *வெங்கடேஸ்வரி***
***வெளிநோயாளிகள் பிரிவு, விழித்திரைப்பிரிவு,***
***அரவிந்த்-திருநெல்வேலி***

# பார்வை பரிசோதனை மையத்தின் பங்கு




கிணத்துக்கடவு என்ற ஊரில் ஆனந்தி என்பவர் வசித்து வருகிறார். அவரது வயது 45. அவர் தனது கண்களைப் பரிசோதிப்பதற்காகக் கிணத்துக்கடவில் உள்ள அரவிந்த் பார்வை பரிசோதனை மையத்திற்கு சென்றுள்ளார். அவருக்கு படிக்க, எழுத எழுத்துக்களைப் பார்ப்பதில் தொந்தரவு இருந்தது. பரிசோதனை மையத்தில் அவருக்கு பார்வை பரிசோதனை செய்யப்பட்டது. வலது கண்ணால் பார்க்கும்போது எதிரில் உள்ள அட்டவணையில் இருந்த எல்லா எழுத்துகளையும் படிக்க முடிந்தது. ஆனால், இடது கண்ணால் பார்க்கும்போது எல்லா வரிசையிலும் நடுவில் உள்ள எழுத்துகளைப் படிக்க முடியவில்லை. அந்தப் பிரச்சனை, அப்போதுதான் ஆனந்திக்குப் புரிந்தது. கண் நரம்பியல் மருத்துவரைப் பார்க்க வேண்டும் என அங்குள்ள பணியாளர்கள், கோயம்புத்தூரில் உள்ள அரவிந்த் கண் மருத்துவமனைக்குச் செல்லுமாறு பரிந்துரைத்துள்ளார்கள்.

கோயம்புத்தூர் அரவிந்திற்கு வந்து கண் நரம்பியல் பிரிவில் பரிசோதித்தபோது, ஆனந்திக்கு கண் நரம்பியல் பார்வை பகுதியில் ஒரு சிறிய துளை (Macula hole) இருப்பது தெரிந்தது. இதனை சரிசெய்ய, அவருக்கு அறுவை சிகிச்சை (ICM PEELING) செய்யப்பட்டது. கண்ணின் உள்ளே வாயு (GAS) நிரப்பப்பட்டது. இரண்டு மாதத்திற்கு பிறகு ஆனந்தி மறுபரிசோதனைக்கு வந்தபோது அவரது கண்களைப் பரிசோதித்துப் பார்த்ததில் குறைபாடு நீங்கியிருந்தது. சரியான தருணத்தில் அவர் அரவிந்த் பரிசோதனை மையத்தை அணுகியதால், அவரது பார்வைக்குறைபாடு விரைவில் கண்டறியப்பட்டு சரிசெய்யப்பட்ட மனநிறைவுடன் வீடு திரும்பினார்.

***விழி ஒளி ஆய்வாளர்***
***அரவிந்த் கண் மருத்துவமனை, கோயம்புத்தூர்***

# கண்நீர் அழுத்த நோய் – குடும்பப் பரிசோதனை



கண்நீர் அழுத்த நோயால் பாதிக்கப்பட்டவரது குடும்பத்தினரும் கண்டிப்பாகப் பார்வை பரிசோதனை செய்துகொள்ள வேண்டும். அவர்களுக்கும் இந்தக் குறைபாடு இருப்பதற்கான சாத்தியங்கள் அதிக அளவில் உள்ளன. இந்நோய்க்கு ஆரம்பக்கட்டத்தில் எந்த அறிகுறியும் இருக்காது. எனவே குடும்பத்தினர் தங்கள் பார்வையில் சிக்கல் இல்லை என்றே நினைப்பார்கள். கண்நீர் அழுத்த நோய்க்கான பிரத்யேக பரிசோதனை எடுத்துக்கொண்டால் மட்டுமே கண்டறிய முடியும்.

கண்நீர் அழுத்த நோயால் பாதிக்கப்பட்டவரது குடும்பத்தினருக்கு இந்தக் குறைபாடு இருந்து, அதை ஆரம்பக் கட்டத்திலே கண்டறிந்துவிட்டால் அவர்களது பார்வைத் திறனை பெருமளவு காப்பாற்றலாம்.

குமுதவள்ளி எனும் 45 வயதுள்ள பெண்மணி , மதுரை அரவிந்த் கண் மருத்துவமனைக்கு கண்நீர் அழுத்த நோய் சிகிச்சைக்காக வருடத்திற்கு ஒருமுறை வருவார். அவரிடம் மட்டுமல்லாமல் கண்நீர் அழுத்த நோய் சிகிச்சைக்காக வரும் அனைவரிடமும் அனைத்து அரவிந்தின் கிளைகளிலும் நாங்கள் சொல்வது குடும்பத்தில் இருக்கும் ரத்தச் சொந்த உறவினர் அனைவருக்கும் கண் பரிசோதனை செய்துக்கொள்ளுங்கள் என்பதே.

மறுபரிசோதனைக்காக சென்ற வாரம் வந்திருந்த குமுதவள்ளி தனது 18 வயது மகளை அழைத்து வந்திருந்தார். அவரைப் பரிசோதித்து பார்த்ததில் அவருக்கு கண்நீர் அழுத்த நோய் இல்லை. மீண்டும் ஒருமுறை அரவிந்திற்கு வந்திருந்த குமுதவள்ளி தனது சகோதரி ரத்தினம் என்பவரை அழைத்து வந்திருந்தார். அவருக்கு வயது 40. ரத்தினத்திற்கு கண்நீர் அழுத்த நோய் இருப்பது பரிசோதனையின்போது தெரிய வந்தது. ஆனால் தனக்கு எந்த அறிகுறியும் தோன்றவில்லை என ரத்தினம் கூறினார். ஆரம்ப நிலையில்தான் கண்நீர் அழுத்த நோய் இருப்பதைத் தெரிவித்தோம். சிகிச்சை பெறத் தொடங்கிவிட்டால் சிறிது காலத்திற்குள் அவருக்கு ஏற்படும் பார்வை பாதிப்பைத் தவிர்க்கலாம் என்பதைத் தெளிவாக உணர்த்தினோம்.

பொதுவாக, குடும்பத்தினர் அனைவருக்கும் பார்வை பரிசோதனை செய்ய வேண்டுமா எனும் தயக்கம் எல்லோருக்கும் இருக்கும். ஏனெனில் வந்து போகும் பயணச்செலவு, மற்றச்செலவு, விடுப்பு எடுக்கவேண்டிய நிலை எனப் பல காரணங்கள் இருக்கும். ஆனால் கண்நீர் அழுத்த நோயானது குடும்பத்தில் பலரையும் தாக்கும் அபாயம் இருப்பதால் நாம் கூடுதல் அக்கறையுடன் நம் குடும்பத்தினரையும் பரிசோதனைக்கு அழைத்துச் செல்ல வேண்டும்.

இதில் மிகவும் சோகமான விஷயம் என்னவெனில் குறைபாடு உள்ளவர்கள் தங்களது குடும்பத்தினரையும் பரிசோதனைக்கு அழைத்து வருவதில்லை. அவர்களும் மறுபரிசோதனைக்கு தொடர்ந்து வருவதில்லை.

தினமும் நூற்றுக்கணக்கான புதிய நோயாளிகள் கண்நீர் அழுத்த நோயால் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். முறையான இடைவெளிகளில் மறுபரிசோதனைக்கு வர வேண்டும். இவர்களில் பெரும்பாலானோர் அவ்வாறு வருவதில்லை. குமுதவள்ளி செய்வதைப் போல ஒவ்வொரு முறை மறுபரிசோதனைக்கு வரும்போதும் குடும்பத்திலிருந்து ஒருவரை அழைத்து வந்தால் அவரும் சிகிச்சை பெறலாம். குடும்பத்தினரும் பார்வை பரிசோதனையை மேற்கொள்ளலாம்.

***கோ.முருகராஜ்***

# உங்கள் கண் கண்ணாடிகளைப் பாதுகாக்கும் முறைகள்


- கண்ணாடிகளை அணியும்போதும் கழட்டும்போதும் இரு கைகளாலும் கண்ணாடி அணிய வேண்டும்.
- பைக் ஓட்டுபவர்கள், ஹெல்மெட் போட்ட பிறகு கண்ணாடி அணியும்போது கவனமாக அணிய வேண்டும். அசௌகரியமாக இருக்கிறது என்பதற்காக வண்டி ஓட்டும்போது ஹெல்மெட்டோ கண்ணாடியோ அணியாமல் செல்லக்கூடாது.
- கண்ணாடிகளைப் பயன்படுத்தாத நேரங்களில் கண்ணாடியைப் பாதுகாப்பான இடத்தில் வைக்க வேண்டும். அதிக தூசு உள்ள இடங்களிலோ சுத்தம் இல்லாத இடங்களிலோ வைப்பதைத் தவிர்க்கவும்.
- கண்ணாடிகளை அவ்வபோது கழுவி, மென்மையான துணியால் துடைக்கவும். நீங்கள் அணிந்திருக்கும் துணியைக் கொண்டே கண்ணாடியை சுத்தம் செய்யதால் லென்சில் கீறல்கள் விழ வாய்ப்புள்ளது.
- நீங்கள் கண்ணாடி அணிபவர்கள் எனில் வருடத்திற்கு ஒருமுறை கண் மருத்துவரை அணுகி உங்கள் பார்வைத் திறனை பரிசோதித்துக் கொள்ள வேண்டும். லென்சின் அளவு மாறுவதற்கு வாய்ப்பு உள்ளது.
- காதிலிருந்து கழட்டாமலே தலைக்கு மேலே கண்ணாடியை வைப்பதைத் தவிர்க்கவும். எனெனில் தலையில் வைப்பதால் கண்ணாடியின் அளவு மாறக்கூடும். கீழே விழுந்து உடையவும் அதிக வாய்ப்பு உள்ளது.
- கண்ணாடிக் கடையில் கொடுத்து வருடத்திற்கு இரண்டு முறை கண்ணாடியைச் சரிசெய்து கொள்ளவும். பொருத்தும் அளவு, முகத்தில் அழுத்தும் இடம் ஆகியவற்றில் மாறுதல் ஏற்பட்டிருக்கலாம். நாம் அதை கவனித்து இருக்க மாட்டோம். எனவே கடையில் கொடுத்து சரிசெய்து வாங்கிக்கொள்வது நல்லது.

## கண்புரை அறுவை சிகிச்சைக்குப்பின் நோயாளிகள் பின்பற்ற வேண்டியவை


அறுவை சிகிச்சை செய்த கண்ணின் பக்கம் மூன்று நாட்களுக்கு படுக்கக்கூடாது


டிவி பார்ப்பதையும் பேப்பர் படிப்பதையும் ஒரு வாரத்திற்கு தவிர்க்கவும்.



தானாகச் முகச்சவரம் செய்பவர்கள் மூன்று நாட்கள் கழித்தும், கடைகளில் செய்பவர்கள் ஏழு நாட்கள் கழித்தும் செய்ய வேண்டும்.


வழக்கமாக எடுக்கும் மாத்திரை மருந்துகள் மற்றும் உணவு முறைகளை எப்பொழுதும் எடுத்துக் கொள்ளலாம்.



அறுவைசிகிச்சை முடிந்து வீட்டிற்கு சென்றபின், கண்ணில் வலியோ, அதிகமாக நீர் வடிந்தாலோ, பார்வை குறைபாடு இருந்தாலோ உடனடியாக நோயாளியை மருத்துவமனைக்கு அழைத்து வரவும்.


தினமும் கழுத்துக்குக் கீழ் குளிக்கலாம். 15 நாட்கள் கழித்து ஷாம்பு அல்லது சோப்பு போட்டு தலைகுளிக்கலாம்.


வெளியே செல்லும் போது ஒரு மாதத்திற்கு கருப்புக் கண்ணாடி அணிய வேண்டும். தூசி, புகை உள்ள இடங்களுக்கு செல்வதைத் தவிர்க்கவும்.


அறுவை சிகிச்சை முடிந்த நோயாளிகள், உங்கள் பதிவேட்டில் குறிப்பிட்டுள்ள தேதியில் மறுபரிசோதனை செய்துகொள்ளவும்

# நீரிழிவு நோய் (Diabetic)




சர்க்கரை நோயைத்தான் மருத்துவ உலகில் நீரிழிவு நோய் எனக் குறிப்பிடுகிறார்கள். நம் உடலில் இன்சுலின் சுரப்பது குறைந்து சர்க்கரையின் அளவைக் கட்டுப்படுத்த முடியாமல் போகும் நிலையே நீரிழிவு நோய் ஆகும். முறையற்ற உணவுப்பழக்கம், போதுமான உடல் உழைப்பு இல்லாமை, உடல் பருமன், பரம்பரையில் யாருக்காவது நீரிழிவு நோய் தாக்கியிருத்தல் போன்ற காரணங்களால் நீரிழிவு நோய் ஏற்படும்.

அதிகப் பசி எடுத்தல், உடல் சோர்வு, மயக்கம், பார்வை மங்கலாகுதல், கை, கால்களில் புண் ஏற்பட்டால் அதிக நாட்களாக ஆறாமல் இருத்தல், சிறுநீர் அதிகமாகக் கழித்தல், அதிக தாகம், திடீரென எடை குறைதல், போன்றவை நீரிழிவு நோயின் அறிகுறிகள். அதனால் 40 வயதிற்கு மேல் உள்ள அனைவரும் இரத்தப் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். நீரிழிவு நோயை குணப்படுத்த இயலாது. ஆனால் சரியாக கவனித்து, உடநலனை முறையாகப் பராமரித்தால் சர்க்கரை நோயாளிகள் சீரான வாழ்க்கையை நடத்த முடியும்.

இதனை வருமுன் காப்பதே நலம். அதற்கு உணவு முறை, உடற்பயிற்சி போன்றவை மூலம் கட்டுப்படுத்தலாம். சர்க்கரை நோய் உள்ளவர்கள் எண்ணெயில் செய்த உணவுப் பொருட்கள், இனிப்புப் பொருட்களை அதிகம் சேர்த்துக்கொள்ளக் கூடாது. சுறுசுறுப்பாக நடத்தல், சைக்கிள் ஓட்டுதல், தினமும் நடைப் பயிற்சி, உடற்பயிற்சி, யோகா ஆகியவற்றை மேற்கொள்ள வேண்டும்.

**நீரிழிவு நோயாளிகள் பரிசோதிக்க வேண்டியவை**

- உடல் எடை
- இரத்த சர்க்கரை, சிறுநீரில் இருக்கும் சர்க்கரையின் அளவை அடிக்கடி பார்க்க வேண்டும்.
- இரத்த அழுத்தம் (BP)
- HbA1C – 3 மாதத்திற்கு ஒருமுறை
- கொழுப்புச்சத்து
- கண்களைப் பரிசோதித்தல்
- உடல் இரத்த அளவு (Hb) பரிசோதித்தல்

**சர்க்கரை நோயினால் ஏற்படும் கண் நோய்கள்:**

- கண் இமையில் கட்டி
- கருவிழிப் புண்
- கண்நீர் அழுத்த நோய்
- கண்புரை
- விழித்திரை பாதிப்பு (Diabetic Retinopathy)
- கிட்டப்பார்வை, இரட்டைப் பார்வை

**சர்க்கரை நோயினால் ஏற்படும் விழித்திரை பாதிப்பு யாருக்கு வருவதற்கு அதிக வாய்ப்பு உள்ளது?**

- நீண்ட காலமாக சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்டவர்கள்.
- இரத்தத்தில் சர்க்கரை அளவை கட்டுப்படுத்தி சரியான நிலையில் பராமரிக்காதவர்கள்.
- சிறுநீரக நோய், அதிக இரத்த அழுத்தம், இரத்த சோகை உள்ளவர்கள், அதிகக் கொழுப்புச் சத்து உள்ளவர்கள்.

விழித்திரை பாதிப்பு நோயின் ஆரம்ப நிலையில் எந்த அறிகுறியும் இருக்காது. அடிக்கடி கண்களைப் பரிசோதிப்பதன் மூலம்தான் நோய் உள்ளதை தெரிந்துக் கொள்ள முடியும்.

விழித்திரை நோய் முற்றிய நிலையில் பார்க்கும் இடங்களில் பூச்சி பறத்தல் போன்ற உணர்வு, பார்வை மங்குதல், கறுப்பு புள்ளிகள் தென்படுதல் போன்றவை தென்படலாம்.

- R.G. *மகாலெட்சுமி, விழி ஒளி ஆய்வாளர்,*
*அரவிந்த் கண் மருத்துவமனை, மதுரை*

# மறுபரிசோதனையின் அவசியம்



நீரிழிவு நோயினால் ஏற்படும் விழித்திரை பாதிப்பை டயபடிக் ரெடினோபதி (Diabteic Retinopathy) என்று கண் மருத்துவர்கள் குறிப்பிடுகின்றனர். நீரிழிவு நோய்க்கு எப்படி தொடர்ச்சியான சிகிச்சை அவசியமோ அதைப்போலவே டயபடிக் ரெடினோபதி நோய்க்கும் தொடர் சிகிச்சை எடுத்துக்கொள்ள வேண்டும்.

நீரிழிவு நோயினால் விழித்திரை பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக சர்க்கரை நோயாளிகளுக்குப் பொதுவாகத் தெரியாது. சரியாகப் பார்க்க முடியவில்லை என்றுதான் கண் மருத்துவமனைக்குச் செல்வார்கள். பரிசோதனையின் போதுதான் தங்களுக்கு இந்தப் பாதிப்பு இருப்பதை உணர்வார்கள். சிகிச்சை முறைகள் பற்றி தெளிவாக மருத்துவர்கள் எடுத்துக் கூறினாலும் நோயாளிகளில் சிலர் மறுபரிசோதனைக்கும் அடுத்தக்கட்ட சிகிச்சைகளுக்கும் முறையாக செல்வதில்லை.

ஆரம்பக்கட்ட நிலையில் (Mild) விழித்திரை பாதிப்பு உள்ளவர்களுக்கு 6 மாதங்களுக்கு ஒருமுறை மறுபரிசோதனைக்கு செல்ல வேண்டும் என்றும் இரண்டாம்கட்ட நிலையில் (Moderate) பாதிப்பு உள்ளவர்களுக்கு 3 மாதங்களுக்கு ஒருமுறை என்றும் முற்றிய நிலையில் (Severe) உள்ளவர்களுக்கு 2 மாதங்களுக்கு ஒருமுறை என்றும் அறிவுறுத்தப்படுகிறது. மறுபரிசோதனைக்கு முறையாகச் செல்வதன் மூலம் சிகிச்சை முறைகளில் தேவையான மாற்றமும் முன்னேற்றமும் மேற்கொள்ளப்படும். மறுபரிசோதனையைத் தவறவிடுவதால் தங்கள் பார்வை பாதிக்கப்படுவதற்கு நோயாளிகளே காரணமாகின்றனர். எவ்வாறெனில் முதற்கட்ட நிலையில் உள்ளவர்கள் மறுபரிசோதனைக்குச் செல்வதைத் தள்ளிபோட்டுகொண்டே இருப்பாரானால் பாதிப்பானது மிக விரைவில் முற்றியநிலையை அடையும் அபாயம் உள்ளது. தனக்கு கண் பாதிப்பு முற்றிய நிலையில் உள்ளது என்பது கூட அவருக்கு தெரியாது. விழித்திரை நரம்புகளில் இரத்தக் கசிவு ஏற்படுகிறது என்றுதான் நினைப்பார். கண் மருத்துவர் பரிசோதித்துதான் முற்றிய நிலை என்பதை அறிவிப்பார்.

மறுபரிசோதனைக்கு முறையாகச் செல்லாததற்கு பல காரணங்களை நோயாளிகள் தெரிவிப்பார்கள். அவர்களை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல யாரும் இல்லை; மருத்துவமனைக்குச் செல்ல வேண்டுமெனில் குறைந்தது ஒன்றிரண்டு தினங்கள் விடுப்பு எடுக்க வேண்டியிருக்கும்; சிகிச்சைக்கு செலவு செய்ய போதுமான பணம் இல்லை என பலவித காரணங்கள் இருக்கலாம். ஆனால், சிரமம் பார்க்காமல் இவற்றை சரிசெய்வது அவசியம். விழித்திரை பாதிப்பு மிகவும் முற்றி, ஏற்படும் பார்வை இழப்பையும் சிகிச்சைக்கு செல்லாததற்கான காரணங்களையும் ஒப்பிட்டு பார்த்தால் விளைவுகளும் ஆபத்துகளும் புரியும்.

விழித்திரை பாதிப்பு ஏற்பட்ட நோயாளிகளுக்கு இருக்கும் பார்வையைத் தக்க வைத்துக் கொள்ளவே சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன. மருத்துவர்களின் சிகிச்சை, செவிலியர்களின் வழிகாட்டுதல்கள், ஆலோசனைகள் மற்றும் நோயாளிகள் மேற்கொள்ளும் சிகிச்சை முறைகள் ஆகியவற்றினால் மட்டும் விழித்திரை பாதிப்பைக் குறைக்க முடியாது. பாதிக்கப்பட்டவர்களின் ஒத்துழைப்பும் மிக மிக அவசியமானது.

*- கோ. முருகராஜ்*

# கண் பரிசோதனை மையங்கள்: கடலூர் மாவட்டம்



கல்கத்தாவிலிருக்கும் சுந்தரவனக் காடுகளுக்கு அடுத்தபடியாகச் சுரபுன்னை மரங்கள் மண்டிக் கிடக்கும் இடமான பிச்சாவரம், கடலூர் மாவட்டத்தில் உள்ளது. சுரபுன்னை போன்ற அரிய மரங்களையும், ஏராளமான மூலிகைகளையும் கொண்ட தீவாக காட்சியளிக்கிறது கடலூர். படகில் ஏறி சுற்றிப்பார்க்கத் தொடங்கினால் இரண்டு பக்கங்களிலும் சுரபுன்னை மரங்கள் மண்டிக்கிடக்கும் இயற்கை அழகை காணலாம்.

தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் ஒன்றான கடலூர் மாவட்டத்தின் மொத்த மக்கள் தொகை 1,73,361. மாநிலத்தின் மிகப்பெரிய ஏரிகளில் ஒன்றான வீராணம் ஏறி இம்மாவட்டத்தில்தான் உள்ளது. தமிழகக் கடற்கரையோர மாவட்டங்களில் கடல் சீற்றங்களால் அதிக பாதிப்புக்கு உள்ளாவதும் கடலூர் மாவட்டம்தான். இருப்பினும் கடல்சார் தொழிலும் முந்திரி, பலா போன்ற வேளாண் தொழிலிலும் சிறப்புடன் விளங்குகிறது. கண்புரை நோய்க்காக சிகிச்சை எடுத்துக்கொள்ள கடலூர் மாவட்டத்திலிருந்து அதிக எண்ணிக்கையில் அரவிந்த் மருத்துவமனைகளுக்கு மக்கள் வருகின்றனர்.

| 2017 டிசம்பர் மாதம் வரை கடலூர் மாவட்டத்தில் உள்ள அரவிந்த்கண் பரிசோதனை மையங்களில் சிகிச்சை எடுத்துக்கொண்டவர்களின் எண்ணிக்கை | |
|---|---|
| மொத்த வெளிநோயாளிகள் | 1,56,489 |
| கண்ணாடி வாங்கியவர்கள் | 21,354 |
| கண்புரை அறுவை சிகிச்சை செய்து பயன் பெற்றவர்கள் | 4,716 |
| சிறப்பு பிரிவுகளில் சிகிச்சை செய்து பயன் பெற்றவர்கள் | 8,921 |

**பெண்ணாடம்**

அரவிந்த் கண் பரிசோதனை மையம்,
14A பட்டி தெரு, ஐயப்பன் கோவில் தெரு அருகில் பழைய பேருந்து நிலையம் பின்புறம், பெண்ணாடம் – 606105
தொலைபேசி: 04143–223100

**நெல்லிக்குப்பம்**

அரவிந்த் கண் பரிசோதனை மையம்,
285/135, வையாபுரி காம்ப்ளக்ஸ், சர்க்கரை ஆலை எதிர்புறம், KASR மெயின் ரோடு, நெல்லிக்குப்பம்
தொலைபேசி: 04142 271575

**குறிஞ்சிப்பாடி**

அரவிந்த் கண் பரிசோதனை மையம்,
71/26, எல்லைக்கல் தெரு, MLA அலுவலகம் எதிரில், குறிஞ்சிப்பாடி.
தொலைபேசி: 04142–258111

**பரங்கிப்பேட்டை**

அரவிந்த் கண் பரிசோதனை மையம்,
1, அஜீமா காம்ப்ளக்ஸ், பிளாட் நம்பர்.1, பக்மீர் மாலிமர் தெரு,
பரங்கிப்பேட்டை–608502, தொலைபேசி:04144–243144

# அரவிந்த் கண் மருத்துவமனை நடத்தும் இலவச கண் பரிசோதனை முகாம்கள் பற்றிய விவரங்கள்

| தேதி | முகாம் நடைபெறும் ஊர் | முகாம் நடைபெறும் இடம் | மாவட்டம் | முகாம் நடத்த உதவுபவர் | மொபைல் |
|---|---|---|---|---|---|
| 15.9.18 | சக்கிமங்கலம் | பஞ்சாயத்து யூனியன் பள்ளி | மதுரை | SBI | 9445863678 |
| 15.9.18 | கீழ்வேலூர் | பிரிமி கல்லூரி | நாகை | இன்ஜீனியரிங் அசோசியேசன் | |
| 16.9.18 | கொள்ளேகால் | அரசு தாலுகா தலைமை மருத்துவனை | சாம்ராஜ்நகர் | V&M பவுண்டேஷன் பெங்களூர் | 9343968272 |
| 16.9.18 | திருப்பூர் | லயன்ஸ் ஹால் | திருப்பூர் | லயன்ஸ் சங்கம் | 9442190045 |
| 16.9.18 | தென்காசி | சுப்புராஜ் மஹால் | திருநெல்வேலி | BSSSSO | 9842132442 |
| 16.9.18 | பட்டம்பி | வியாபாரி பவன் டிரஸ்ட் | பாலக்காடு | சேம்பர் ஆப் காமர்ஸ் | 9846781688 |
| 16.9.18 | நல்லம்பள்ளி | விஜய் வித்யாலயா ஆர்ட்ஸ் கல்லூரி | தருமபுரி | விஜய் வித்யாலயா ஆர்ட்ஸ் கல்லூரி | 9865887393 |
| 16.9.18 | ஆத்திகுளம் | இராமகிருஷ்ணா மடம் | மதுரை | இராமகிருஷ்ணா மடம் | 9487493525 |
| 16.9.18 | செய்யார் | அரசு பெண்கள் மே.நி.பள்ளி | திருவண்ணாமலை | கௌதம் பைனான்ஸ் | |
| 16.9.18 | சிலட்டூர் | பஞ்சாயத்து யூனியன் பள்ளி | புதுக்கோட்டை | ஸ்ரீஇராமகிருஷ்ணா டிரஸ்ட் | 9786163179 |
| 16.9.18 | குரயூர் | பஞ்சாயத்து யூனியன் பள்ளி | மதுரை | ஆர்ட்கிராப்ட் (Artcraft) | |
| 16.9.18 | நெய்காரப்பட்டி | குருவப்பா மே.நி.பள்ளி | திண்டுக்கல் | மக்கள் நல மன்றம் | 9942959710 |
| 16.9.18 | எடப்பாடி | அரசு ஆண்கள் மே.நி.பள்ளி | சேலம் | லயன்ஸ் சங்கம் | 9488811558 |
| 16.9.18 | திருநாகேஸ்வரம் | பஞ்சாயத்து யூனியன் பள்ளி | தஞ்சாவூர் | லயன்ஸ் சங்கம் | 9940934480 |
| 16.9.18 | சிவகாசி | அரசன் திருமண மண்டபம் | விருதுநகர் | ஸ்ரீசத்யசாய் சேவா சமிதி | 9894416135 |
| 16.9.18 | வலியத்துவாலா | சமுதாயக்கூடம் | இடுக்கி | SNDP டிரஸ்ட் | |
| 16.9.18 | கொடைக்கானல் | தனியார் மண்டபம் | திண்டுக்கல் | சன் அரிமா சங்கம் | |
| 16.9.18 | கடலூர் | படலேஸ்வரர் மே.நி.பள்ளி | கடலூர் | அழகப்பா ஜீவல்லரி | |
| 16.9.18 | புதுப்பட்டினம் | அரசு எலிமெண்டரி பள்ளி | நாகை | லயன்ஸ் சங்கம் | |
| 21.9.18 | பொள்ளாச்சி | லயன்ஸ் ஹால் | கோயம்புத்தூர் | லயன்ஸ் சங்கம் | 9994611911 |
| 21.9.18 | நாஞ்சிக்கோட்டை | அரசு நடுநிலைப்பள்ளி மரியாள் | தஞ்சாவூர் | நற்சிந்தனை இயக்கம் | 9442394007 |

| தேதி | முகாம் நடைபெறும் ஊர் | முகாம் நடைபெறும் இடம் | மாவட்டம் | முகாம் நடத்த உதவுபவர் | மொபைல் |
|---|---|---|---|---|---|
| 22.9.18 | மேலசிந்தலசேரி | ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி | தேனி | ரோட்டரி சங்கம் சின்னமனூர் | |
| 22.9.18 | செம்பனார்கோயில் | கலைமகள் மெட்ரிக் மே.நி.பள்ளி | நாகை | லயன்ஸ் சங்கம் | |
| 22.9.18 | H.R.கோட்டை | லயோலா திருமண மண்டபம் | திண்டுக்கல் | கேத்லிக் அசோசியேசன் | 9965611478 |
| 23.9.18 | காரைக்குடி | SMSV மே.நி.பள்ளி | சிவகங்கை | லயன்ஸ் சங்கம் | 9443207554 |
| 23.9.18 | சின்ன மாங்குளம் | பஞ்சாயத்து யூனியன் நடுநிலைப் பள்ளி | மதுரை | இமைகள் இளைஞர் சங்கம் | 9677772227 |
| 23.9.18 | நச்சாந்துபட்டி | நகரத்தார் மண்டபம் | புதுக்கோட்டை | லயன்ஸ் சங்கம் | 9443459349 |
| 23.9.18 | ஓசூர் | R.V.ஆண்கள் மே.நி.பள்ளி | கிருஷ்ணகிரி | சேவா பாரதி | |
| 23.9.18 | நிலக்கோட்டை | தியாகராஜா மில் வளாகம் | திண்டுக்கல் | தியாகராஜா மில் | |
| 23.9.18 | குத்தாலம் | அரசு பெண்கள் உயர்பள்ளி | நாகை | லயன்ஸ் சங்கம் | |
| 23.9.18 | சங்ககிரி | ரோட்டரி ஹால் | சேலம் | ரோட்டரி சங்கம் | 9842743683 |
| 23.9.18 | விளாங்குடி | விஷ்ணுபிரியா திருமணமண்டபம் | தஞ்சாவூர் | லயன்ஸ் சங்கம் | 9443135407 |
| 27.9.18 | தேவராயன் பாளையம் | AKVN மருத்துவமனை | திருப்பூர் | சென்னை சில்க்ஸ் | 8508328773 |
| 27.9.18 | வருசநாடு | ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி | தேனி | சத்யசாய் அமைப்பு | |
| 29.9.18 | உப்பிலியாபுரம் | அரசு பிரைமரி பள்ளி | திருச்சி | லயன்ஸ் சங்கம் | 9443165249 |
| 29.9.18 | திருப்பத்தூர் | அரசு மே.நி.பள்ளி | சிவகங்கை | டான் பவுண்டேஷன் | 8248227563 |
| 29.9.18 | ஹன்சூர் | SLV கம்யூனிட்டி ஹால் | மைசூர் | திரு.சின்னசாமி மற்றும் முருகேசன் குடும்பம் | 9448352929 |
| 29.9.18 | T. கல்லுப்பட்டி | அய்யனார் கல்யாண மஹால் | மதுரை | நகர்நல கமிட்டி | 9842175940 |
| 29.9.18 | வளநாடு | இராமரத்தின கல்யாணமஹால் | திருச்சி | Dr.VNL டிரஸ்ட் | 9965560142 |
| 29.9.18 | T. கள்ளிப்பட்டி | ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி | தேனி | பெரியகுளம் அரிமா சங்கம் | |
| 30.9.18 | ஊட்டி | CSI ஹோபர்ட் பள்ளி | நீலகிரி | ரோட்டரி சங்கம் | 9442109100 |
| 30.9.18 | கும்பகோணம் | சரஸ்வதி பாடசாலை | தஞ்சாவூர் | கும்பகோணம் ஹோஸ்ட் | 9443116356 |
| 30.9.18 | பண்ருட்டி | திருவள்ளுவர் பிரைமரி பள்ளி | கடலூர் | ஆரிய வைசிய சமூகம் | |

| தேதி | முகாம் நடைபெறும் ஊர் | முகாம் நடைபெறும் இடம் | மாவட்டம் | முகாம் நடத்த உதவுபவர் | மொபைல் |
|---|---|---|---|---|---|
| 30.9.18 | ஆத்தூர் | விஷ்ணுபிரியா திருமணமண்டபம் | சேலம் | முத்துசாமி முத்தாயிம்மாள் சாரிட்டபிள் டிரஸ்ட் | 9944936363 |
| 30.9.18 | காஞ்சிரப்பள்ளி | டோமினக் சர்ச் | கோட்டையம் | டோமினக் சர்ச் | |
| 30.9.18 | மயிலாடுதுறை | அரசு முனிசிபல் மே.நி.பள்ளி | நாகை | மீரா மார்பிள்ஸ் | |
| 3.10.18 | கன்னியாகுமரி | விவேகானந்த கேந்திரா ஹால் | கன்னியாகுமரி | விவேகானந்த கேந்திரா | 9486030438 |
| 6.10.18 | தருமபுரி | ரோட்டரி ஹால் | தருமபுரி | ரோட்டரி சங்கம் | 9842761659 |
| 6.10.18 | சிந்தாமணி | R.C. பிரைமரி பள்ளி | திருநெல்வேலி | ராஜகோபால் நாயக்கர் டிரஸ்ட் | 9865493488 |
| 6.10.18 | செங்கம் | கணேசர் திருமண மண்டபம் | திருவண்ணாமலை | கணேசர் குரூப்ஸ் | |
| 6.10.18 | பள்ளத்தூர் | சீதாலெட்சுமி கலை கல்லூரி | சிவகங்கை | லயன்ஸ் சங்கம் | 9994441635 |
| 7.10.18 | சாம்ராஜ் நகர் | அரசினர் மருத்துவமனை | சாம்ராஜ் நகர் | DBCS சாம்ராஜ் நகர் | 9945228015 |
| 7.10.18 | வடசேரி | SMRV மே.நி.பள்ளி | கன்னியாகுமரி | BSSSSO | 9578678075 |
| 7.10.18 | கொப்பம் | லயன்ஸ் பள்ளி பாலக்காடு | பாலக்காடு | லயன்ஸ் சங்கம் | 9349458196 |
| 7.10.18 | திருப்பரங்குன்றம் | மாதா அமிர்தானந்தமயி மடம் | மதுரை | மாதா அமிர்தானந்தமயி மடம் | 9443337080 |
| 7.10.18 | மேட்டுப்பாளையம் | ஜெயின் சங்கம் பில்டிங் | கோயம்புத்தூர் | ஜெயின் சங்கம் | 9865789137 |
| 7.10.18 | கோபிசெட்டிப் பாளையம் | சின்ன வைரவிழா எலிமெண்டரி பள்ளி | ஈரோடு | லயன்ஸ் சங்கம் | 9791966759 |
| 7.10.18 | திருவண்ணாமலை | கார்மெல் மெ.பள்ளி | திருவண்ணாமலை | சாயர் ஜீவல்லர்ஸ் | |
| 7.10.18 | கீரனூர் | அரசு மே.நி.பள்ளி | புதுக்கோட்டை | அன்னை தெரசா டிரஸ்ட் | 9443997807 |
| 11.10.18 | தேவராயன் பாளையம் | AKVN மருத்துவமனை | திருப்பூர் | சென்னை சில்க்ஸ் | 8508328773 |
| 13.10.18 | சத்தியமங்கலம் | ரோட்டரி ஹால் | ஈரோடு | ரோட்டரி சங்கம் சத்தி | 9943011211 |
| 13.10.18 | தருமபுரி | சந்திரபாலசுப்பிரமணியம் மெ.பள்ளி | தருமபுரி | ஹேமலதா டிரஸ்ட் | 9942253585 |
| 13.10.18 | நஞ்சன்கூடு | டவுன் டென்னிஸ் கிளப் | மைசூர் | டவுன் டென்னிஸ் கிளப் | 9019126767 |
| 13.10.18 | உடுமலைப்பேட்டை | லயன்ஸ் ஹால் | திருப்பூர் | லயன்ஸ் சங்கம் | 9894623625 |
| 14.10.18 | R.R. நகர் | ஸ்ரீராம் பிரைமரி பள்ளி | விருதுநகர் | ராம்கோ சிமெண்ட் | 9994497864 |
| 14.10.18 | ஈரோடு | செங்குந்தர் ஆண்கள் மே.நி.பள்ளி | ஈரோடு | லயன்ஸ் சங்கம் | 9443405016 |
| 14.10.18 | பரப்பூர் | ஓல்ட் ஏஜ் ஹோம் | திருச்சூர் | பகல் வீடு | |

# கண் தானம் செய்த வள்ளல்கள்

**அரவிந்த் – திருநெல்வேலி**

**டிசம்பர்-2017**

செல்வமணி (61) - சிவகாசி.
கந்தசாமி (73) - சிவகாசி.
நாகராஜன் (73) - சிவகாசி.
செண்பகப்பூ (80) - சிவகாசி.
சஞ்சீவித்தாயம்மாள் (75) - சிவகாசி.
காளீஸ்வரி (65) - சிவகாசி.
ஆறுமுகச்சாமி (64) - சிவகாசி.
காளீஸ்வரி (60) - சிவகாசி.
ஜெயராஜ் (75) - சிவகாசி.
துரைராஜ் (84) - சிவகாசி.
காமாட்சியம்மாள் (70) - சிவகாசி.
பிரபாகரன் (30) - சிவகாசி.
தமிழ்செல்வி (44) - சிவகாசி.
பாண்டியன் (57) - சிவகாசி.
மணிமேகலை (22) - சிவகாசி.
பாண்டீஸ்வரி (47) - சிவகாசி.
சித்தரஞ்சன் (76) - சிவகாசி.
மாரியப்பன் (96) - சிவகாசி.
ஜெயலெட்சுமி (51) - சிவகாசி.
உண்ணாமலைத்தாய் (86) - சிவகாசி.
இரத்தினம்மாள் (71) - சிவகாசி.
நாகராஜன் (45) - சிவகாசி.
வசந்தி (65) - சிவகாசி.
தர்மராஜன் (68) - சிவகாசி.
முருகேசன் (60) - சிவகாசி.
சீத்தாலெட்சுமி (70) - சிவகாசி.
தியாகராஜன் (59) - சிவகாசி.
ஆவுடையப்பன் (78) - திருநெல்வேலி டவுண்.
புஷ்பம் (72) - தென்காசி.
பெருமாள் (69) - நாங்குநேரி.
சங்கரநாராயணன் (65) - கோவில்பட்டி.
சாந்தமூர்த்தி (78) - கீழப்பாவூர்.
புஷ்பலெட்சுமியம்மாள் (77) - தூத்துக்குடி.

**அரவிந்த் – கோயமுத்தூர்**

**ஜூன்-2017**

மோகன் பிரபு (35) - அன்னூர்.
மாரப்ப கவுண்டர் (85) - ஈரோடு.
ஜெயகுமார் (70) - மூலனூர்.
அமிர்தம் (70) - சிங்காநல்லூர்.
பெருமாள்.N.(24) - திண்டுக்கல்.
சுப்பையன்.S.(74) - திருப்பூர்.
இராதாமணி (47) - திருப்பூர்.
பழனிச்சாமி (80) - திருப்பூர்.
வள்ளியம்மாள் (94) - திருப்பூர்.
ஜெயமணி (66) - திருப்பூர்.
சீனிவாசன்.A.(79) - திருப்பூர்.
சவுண்டம்மாள் (72) - திருப்பூர்.
குப்பாத்தாள் (92) - திருப்பூர்.
செல்வராஜ் (43) - பொங்கலூர்.
சுப்ரமணியம் (83) - பொள்ளாச்சி.
கோபால் (70) - பொள்ளாச்சி.
மயில்சாமி (60) - பொள்ளாச்சி.
கிருஷ்ணமூர்த்தி (86) - பொள்ளாச்சி.
ராஜ்.T.K.(58) - தென்னம்பாளையம்.
பிரபாகரன் (53) - வெள்ளக்கோவில்.
செல்லப்ப கவுண்டர் (90) - வெள்ளக்கோவில்.
பழனிச்சாமி.K.C.(67) - வெள்ளக்கோவில்.
கிருஷ்ணன்.V.K. (81) - ஊட்டி.
சரஸ்வதி.R.(81) - உடுமலைப்பேட்டை.
நாகத்தாள் சுப்ரமணியன் (85) - உடுமலைப்பேட்டை.
சாந்தா லெட்சுமி (81) - உடுமலைப்பேட்டை.
பழனிச்சாமி கவுண்டர் (82) - உடுமலைப்பேட்டை.
பொன்னுசாமி (81) - உடுமலைப்பேட்டை.
பழனியம்மாள் (85) - உடுமலைப்பேட்டை.

**2018 ம் ஆண்டில் ஆகஸ்ட் மாதம் (24.8.18 வரை) நமது ரோட்டரி அரவிந்த் அகில உலக கண் வங்கி மூலம் கண்களைத் தானமாகப் பெற்று கண்ஒளி பெற்றவர்களின் எண்ணிக்கை: 765.**

கண்தானம் செய்வதற்கு எந்த வயது வரம்பும் இல்லை. அதைப் பற்றிய விழிப்புணர்வை அளிக்கவே கண்தானம் செய்தவர்களின் வயதையும் குறிப்பிட்டுள்ளோம்.

கண்தானம் பற்றி தகவல் தெரிந்துகொள்வதற்கு, தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்

**அரவிந்த் கண் வங்கிகள்:**

மதுரை – **0452–435 6100**
திருநெல்வேலி – **0462–4356100**
கோயம்புத்தூர் – **0422–4360400**
பாண்டிச்சேரி – **0413–2619100**

**அரவிந்த் கண் சேகரிப்பு மையங்கள்:**

திண்டுக்கல் – **0451–2448100**
தேனி – **04546–252658**
சேலம் – **0427–2356100**

**அரவிந்த் கண்தான மையம்**

கும்பகோணம் – **98428 20007**

**கூடுதல் விவரங்களுக்கு:**
www.aravind.org/default/servicescontent/Eyebanks

*Owned and published by Dr. G. Natchiar from Aravind Eye Hospital, 1, Anna Nagar, Madurai - 625 020 and*
*Printed by N. Seshadri at Graphico, No, 172, Vakil New Street, Simmakkal, Madurai - 625 001.*
*Editor: Dr. G. Natchiar / Annual Subscription Rs.25/-*

## யோகா செய்வதால் ஏற்படும் நன்மைகள்

